## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலின் போதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய வருடத்தில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா.7,214,057 அட்டுறுச் செலவீனங்கள் மற்றும் ரூபா. 480,000 செலுத்த வேண்டிய சம்பளங்கள் பொறுப்புக்களில் காட்டாமல் திரட்டிய இலாபத்திற்கு மீண்டும் | இந்த ரூபா.7,214,057 தொகையானது 10 வருடங்களுக்கு மேலாக காணப்படுகின்ற அட்டுறுச் செலவீனங்களாகவுள்ளது.இ தற்காக செலவு செய்யவேண்டிய தரப்பினரை இனங்கண்டு தீர்மானிப்பது கடினமாகவுள்ளது. அதற்கிணங்க, ஆராய்ச்சிப் பணிப்பாளரின் சம்பளம் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளச்சேர்க்கப்பட்டிருந்தது டன் தேவையான வெளிப்படுத்தல்கள் நியமம் 03 இன் 54 ஆம் பந்திக்கிணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ரூபா. 480,000 தொடர்பில் உரிய உத்தியோகத்தரை தொடர்புகொள்ளமுடியவில்லை. இது தொடர்பில் முகாமைத்துவ சபைக்கு அறிவித்திருந்து இது இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிறுவனத்தின் கட்டிடங்கள் தவிர்ந்த ரூபா 14.2 மில்லியன் பெறுமதியான ஏனைய பெரும்பாலான சொத்துக்கள் முழுமையாக பெறுமதி செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகைய சொத்துக்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமதிசெய்யப்பட்ட சொத்துக்கள் கணக்கீட்டு நியமம் 07 இன் 92(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நியமத்தின் 92(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| விடயம் | தொகை ரூபா (மில்லியன்) | கணக்காய்வுச் சான்றுகள் வழங்கப்படாமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பயிற்சிப் பிரிவின் வட்டி வருமானம் | 2.1 | நிலையான வைப்பு புதுப்பித்தல் அறிவித்தல்கள் | புதுப்பித்தல் அறிவித்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானத்தை கணிப்பிடுவதற்கு உரிய புதுப்பித்தல் அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 32 ஆம் இலக்க இலங்கை உபாய கற்கைகள் நிறுவகச் சட்டம் (திருத்தப்பட்டது) | | | | |
| | (i) | 10 (அ) ஆம் பந்தி | நிறுவகத்தின் இயக்குனர் சபையானது ஐந்து நபர்களைக் கொண்ட சர்வதேச ஆலோசனைக் குழுவை நியமித்திருக்க வேணடியிருந்த போதிலும் அத்தகைய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு மீள எடுத்துச்செல்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டும். |
| | (ii) | 10 உ (1) ஆம் மற்றும் 10 உ(2) ஆம் பிரிவு | பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு பயிற்சி நிறுவகத்தினை லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்திற்கு இணைத்தலானது சட்டமானது பிரேரணை படுத்தியதிலிருந்து செயற்பாட்டிலிருப்பதுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கல்விசார் பாடநெறிகள் நிறுவகத்தின் பிரிவொன்றாக நடாத்தப்பட வேண்டியதுடன் நிறுவகத்திற்க நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இவ் நிறுவகத்தின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியராக கருதப்படுவதற்கு ஏற்பாடுகள் அதற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு மீள எடுத்துச் செல்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 10 உ (2) (i) ஆம் பிரிவு | பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு பயிற்சி நிறுவகத்தால் பேணப்பட்டு வருகின்ற வங்கிக்கணக்கிலுள்ள பணம் நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியபோதும், அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு மீள எடுத்துச் செல்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 26,362,668 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச்சுற்றறிக்கை | கைவிரல் அடையாள இயந்திரத்தை நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரத்தால் உறுதிப்படுத்தப்படாத காலப்பகதிக்காக மேலதிகநேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபைக்கூட்டத்தில் கைவிரல் அடையாள இயந்திரத்தை நிறுவுவதற்கு கலந்தாலோசித்திருந்ததுடன் இது அனுமதி இல்லாமல் நிறுத்தப்பட்டதால் மேலதிக நடவடிக்கையை எடுப்பது கடினமாகவுள்ளது. முகாமைத்துவ சபைக்கு இத்தீல்மானத்தை மீள்சசமர்ப்பிதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கபப்பட்டது. | மேலதிக நேர கொடுப்பனவை மேற்கொள்ளும் போது கைவிரல் அடையாள இயந்திரத்தின் உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | பிரிவு 1.6.5.3 | குறித்த வருடத்திற்கான ஆண்டறிக்கைகள் அடுத்துவரும் ஆண்டிற்கான மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், நிறுவகமானது 2007 இலிருந்து 2021 யூன் 30 வரை வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 11.9.3.1 | ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் ஊக்கவிப்பு திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதும் நிறுவகமானது அதனை தயாரித்து அனுமதி பெற்றிருக்கவில்லை. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் நிறுவகத்தின் பதவிகள் தொடர்பில் அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 (உ) ஆம் பந்தி | அனைத்து ஆட்சேர்ப்புக்கள்/ வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உரிய பதவிக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் அல்லது சம்பளக்குறியீட்டினால் நிரப்பப்பட வேண்டும். நிறுவகத்தால் உத்தியோகத்தர் சம்பளங்கள்/ படிகளின் தீர்தானமானது மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும் அத்தகைய வேண்டதல்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட (ஈ) இனை பூர்த்தி செய்த பின்னர் உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டி | | | |
| (i) | 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டி | பிரதான பெறுகைத்திட்டம் மற்றும் பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டத்தை தயாரிப்பதற்கும் அதனுடைய தொடர்புடைய செயறடபாடுகளுக்கும் நடவடிக்கை எடப்பதற்காக அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 5.4.8 ஆம் வழிகாட்டி | ரூபா 2,836,417 பெறுமதியான மூன்று ஒப்பந்த வேலைகளுக்காக செயலாற்றல் பிணைமுறிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் செயலாற்றல் பிணைமுறிகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,397,748 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,183,190 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 22,785,442 வீழ்ச்சி காணப்பட்டது. பாடநெறிக்கட்டணம் மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 22,783,538 ஆல் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு காரணமாகவுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனீன்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்துடன் இணைக்கப்பட வேண்டியிருந்த பயிற்சிப்பிரிவானது நிறுவகத்தில் போதிய இடமிருந்த போதிலும் அந்த இடத்தில் பரமாரிக்காமல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டதன் காரணமான 2016 இலிருந்து 2020 வரை ரூபா. 23,565,632 தொகையானது வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பிரகாரம் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் இடத்தில் பண்டாரநாயக்க சர்வதேச துாதரக பயிற்சிப் பிரிவு நிறுவப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவீனங்களை மேற்கொள்ளும் போது பொருளாதார ரீதியிலும் வினைத்திறனாக வும் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2006 பெப்ரவரி 23 ஆந் திகதிய அமப 003/214/0202/06 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அரச காணிச்சட்டத்தின் பிரிவு (அ) இன் பிரகாரம் கௌரவ ஜனாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் இலக்கம் 24, கோர்ரன் பலஸ், கொழும்பு 07 இலுள்ள சொத்தினை மாற்றுவதற்கும் நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் சொத்தினை கையேற்தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 24, கோர்ரன் பலஸ், கொழும்பு 07 இலுள்ள சொத்தினை கையேற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ட்டு வருகின்றது. | நிறுவகத்தின் சொத்தின் உரிமையை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவகத்தின் பயிற்சிப்பிரிவானது 2019/2020 ஆம் ஆண்டு கல்வியாண்டிற்காக மூன்று பாடநெறிகளைத் தொடங்கியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்திருந்தது. பாடநெறிகளைப் பதிவுசெய்து பூர்த்திசெய்த மாணவர்களின் சதவீதம் முறையே முறையே 44 சதவீதம், 53 சதவீதம், மற்றும் 49 குறைவான சதவீதமாகவிருந்தது. | மாணவர்களின் தனிப்பட்ட காரணங்கள் பாடநெறியை இடைநிறுத்துவதற்கு தாக்கத்தை செலுத்தியிருந்தது. | பாடநெறியை முடிக்கும் வரை மாணவர்களை வழிநடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |